3. அறிவிப்புகள்.

(1) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அண்ணாமலை பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு (செனேட்) தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர் கள் தங்களுள் இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத் தேர்தல் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் நடை பெறும். இத் தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் திர்ணயிக்கப் பட்டிருக்கிறது :—

நியமனத் தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும்	9—3—84 நண்பகல் 12 மணி
நியமனத் தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும்	9—3—84 பிற்பகல் 1 மணி
நியமனத் தாள்கள் திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும்	12—3—84 நண்பகல் 12 மணி
வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கான கடைசி நாளும், நேரமும்	12—3—84 பிற்பகல் 1 மணி
தேர்தல் இருப்பின், அதற்கான நாளும், நேரமும்	பின்னர் அறிவிக்கப்படும்

நியமனத்தாளும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் அகர வரிசைப் பட்டியலும் மேலவைச் செயலாளரிடமிருந்து, அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(2) சென்னைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சென்னைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு (செனேட்) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுள் மூவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத் தேர்தல் விகிதாச்